**<u>காயல்பட்டினம் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில்</u>**
**<u>27.09.2023 ஆம் நாள் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்டத்தின்</u>**
**<u>தீர்மானம் நகல்கள்</u>**

**பொருள் எண்:1**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் அவர்களால் 05.08.2023 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தில் நகராட்சி வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் உள்ள அரசு பள்ளிகள், நகராட்சி பள்ளிகள் மற்றும் நகராட்சி வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்ட அங்கன்வாடி மையங்கள் (ICDS) மற்றும் மதிய உணவு மையங்கள் அனைத்தும் மாநில நிதி ஆணையம் – கல்வி நிதியில் (SFC- Educational Fund) நகராட்சியால் பராமரிப்பதற்கு ஒரு வார காலத்திற்குள் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனைத்து நகராட்சிகளும் முன்மொழிவுகளை அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளதால் அனைத்து நகராட்சிகளும் முன்மொழிவுகளை 11.08.2023- தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு 07.08.2023 அன்று நடத்தப்பட்ட காணொலி ஆய்வுக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

மேற்காணும், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் காணொலி ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள நகராட்சி பள்ளிகளை மேம்பாடு செய்வதற்கு கீழ்காணும் விபரப்படி, மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **பள்ளியின் பெயர்** | **மதிப்பீடு ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|
| 1. | நகராட்சி துவக்கப்பள்ளி, கேடிஎம் தெரு, காயல்பட்டினம் | 30.00 |
| 2. | நகராட்சி துவக்கப்பள்ளி, தீவுத் தெரு, காயல்பட்டினம் | 25.00 |
| 3. | நகராட்சி துவக்கப்பள்ளி, மங்களவாடி, காயல்பட்டினம் | 34.00 |
| 4. | நகராட்சி நடுநிலைப்பள்ளி, தைக்கா தெரு, காயல்பட்டினம் | 11.00 |
| 5. | நகராட்சி நடுநிலைப்பள்ளி, கடையக்குடி, காயல்பட்டினம் | 42.00 |
| 6. | நகராட்சி நடுநிலைப்பள்ளி, ஓடக்கரை, காயல்பட்டினம் | 84.00 |
| **மொத்தம்** | | **226.00** |

மேற்காணும் ஆறு (6) எண்ணம் நகராட்சி பள்ளிகளை மாநில நிதி ஆணையம் கல்வி நிதியில் (SFC- Educational Fund) மேம்படுத்தும் பணிகள் செய்வதற்கு தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீடுகளுக்கு உரிய அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு திட்டப் பிரேரணைகள் அனுப்புவதற்கு நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விபரம் நகர்மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. நகராட்சி பள்ளிகளை மேம்பாடு செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 1522/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.501</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:2**

காயல்பட்டினம் நகராட்சி பேருந்து நிலையத்தை மேம்பாடு செய்வதற்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை எண்.34 (6)-ல் கண்டுள்ளவாறு, வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பினை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20543/2021/தி1-1 நாள்.03.04.2023-ல் தெரிவித்துள்ளவாறும், மாவட்ட ஆட்சித் தலைவர் தூத்துக்குடி, அவர்களின் கடிதம் ந.க.எண்.477/2023/இ1 நாள். 24.07.2023 தேதிய பரிந்துரையின்படியும், காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் பேருந்து நிலையத்தை மேம்பாடு செய்வதற்கு அரசாணை (4D) எண்.39 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC) துறை நாள். 14.09.2023-ன்படி, கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-2024ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | KNMT Share | ULB Share | திட்ட மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | காயல்பட்டினம் நகராட்சி பேருந்து நிலையத்தை நவீன முறையில் மேம்படுத்தும் பணி (வார்டு எண். 10 எல். எப். ரோடு சர்வே எண்.83 & 84) | 275.00 | 275.00 | 550.00 |

மேற்காணும் விபரப்படி, கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-2024ஆம் ஆண்டு இந்நகராட்சி பேருந்து நிலையத்தை மேம்பாடு செய்வதற்குரிய திட்ட மதிப்பீடு ரூ.550.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன்படி, தொழில்நுட்ப அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நகர் மன்றத்தின் அனுமதிக்காக முன்வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அரசாணை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. இந்நகராட்சி பங்கு தொகை ரூ.275.00 இலட்சத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 477/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.502</u>**

- பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.
- நகராட்சி பங்கு தொகை ரூ.275.00 இலட்சம் வருவாய் நிதியிலிருந்து செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்படுகிறது.
- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:3**

காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் புதிய சந்தைகள் அமைப்பதற்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை எண்.34 (13)-ல் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பினை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20543/2021/தி1-4 நாள்.03.04.2023-ல் தெரிவித்துள்ளவாறும், மாவட்ட ஆட்சித் தலைவர் தூத்துக்குடி, அவர்களின் கடிதம் ந.க.எண்.478/2023/இ1 நாள். 24.07.2023 தேதிய பரிந்துரையின்படியும், காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் புதியதாக தினசரி சந்தை ஒன்று அமைப்பதற்கு அரசாணை (4D) எண்.39 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC) துறை நாள்.14.09.2023-ன்படி, கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-2024ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

| வ. எ ண் | பணியின் விபரம் | KNMT Share | ULB Share | திட்ட மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | காயல்பட்டினம் நகராட்சி பேருந்து நிலையம் வார்டு எண்.10 சர்வே எண்.(84) இடத்தில் புதியதாக தினசரி சந்தை ஒன்று அமைத்தல் | 77.00 | 76.00 | 153.00 |

மேற்காணும் விபரப்படி, கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-2024ஆம் ஆண்டு இந்நகராட்சி பேருந்து நிலைய அருகில் புதியதாக தினசரி சந்தை ஒன்று அமைப்பதற்குரிய திட்ட மதிப்பீடு ரூ.153.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன்படி, தொழில்நுட்ப அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நகர் மன்றத்தின் அனுமதிக்காக முன்வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அரசாணை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. இந்நகராட்சி பங்கு ரூ.76.00 இலட்சத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 478/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.503</u>**

- பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.
- நகராட்சி பங்கு தொகை ரூ.76.00 இலட்சம் வருவாய் நிதியிலிருந்து செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்படுகிறது.
- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:4**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7, சர்வே எண். 392/5-ல் புதியதாக நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி ரூ.188.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு அரசாணை (4D) எண்.26 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 20.07.2023ன் படி கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2023-2024-ன் கீழ் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்காணும் அனுமதியின்படி, இப்பணிக்கு 25.08.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப ஆவணங்கள் (Tenhnical Bid) தகுதியானதாக இருப்பதாக இந்நகராட்சி ஒப்பந்தப்புள்ளி சீராய்வு குழு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (Tender Evolution Committee Report) அதன்படி, இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைக்கூறல் (Price Bid) 11.09.2023 அன்று மின்னனு முறையில் திறக்கப்பட்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | M/s. M.H.T. Engineering,<br>17/12, கற்பக விநாயகர் கோவில் தெரு,<br>ஈக்காட்டுத்தாங்கல்,<br>சென்னை-600032. | மதிப்பீடு ரேட்டை விட 0.02% குறைவு |
| 2. | M/s. Yes Yes JEE Engineering,<br>11/91 காமராஜர் தெரு திருவள்ளுவர் நகர்,<br>அயனாவரம்,<br>சென்னை -600023. | மதிப்பீடு ரேட்டை விட 0.15% கூடுதல் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு ரேட்டை விட குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/s. M.H.T. Engineering, என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை

செய்யப்பட்டுள்ளதை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதையும், பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**(ந.க.எண். 481/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.504</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:5**

காயல்பட்டினம் நகராட்சியின் 05-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. M.K.S. ரசீதா பீவி அவர்கள் கீழ்க்காணும் பணிகள் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி தருவதற்கு தெரிவித்துள்ள கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பரீசிலனைக்கும் வைக்கப்படுகிறது.

**தெரு விளக்கு**

- பிலால் நகர் பகுதி 3வது தெரு, 4வது தெரு, 6வது தெரு, MOHIDEEN SCHOOL GIRL SECTION AREA அதன் சுற்றி இருக்கும் குடியிருப்பு விரிவாக்க பகுதிகளுக்கு மின் கம்பங்கள் கூடிய தெரு விளக்குகள் அமைத்தல்.
- மின் கம்பங்கள் இருந்தும் தெருவிளக்கு இல்லாத மொத்த எண்ணிக்கை 55. இதில் ஒரு சில மின்கம்பங்கள் HT Line செல்வதால் அதற்கு ஏற்றவாறு தெரு விளக்குக்கு மின் இணைப்பு ஏற்படுத்தி தருமாறும் பழைய தெரு விளக்குகளை அகற்றி புதிய எல்.ஈ.டி விளக்குகளை அமைத்தல்.

**<u>தீர்மானம் எண்.505</u>**

- இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் புதிய LED தெருவிளக்குகள் அமைப்பதற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. பணிகளை விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண்:6**

மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களின் கடிதம் ந.க.எண்.90/செ.ம.தொ.அ/2023 நாள்:23.06.2023 –ன்படி, காயல்பட்டினம் நகராட்சியில் செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு அரசின் வளர்ச்சி திட்டம் மற்றும் சாதனைகள் தமிழ் முரசு மலரில் சுதந்திர தின சிறப்பு தொழில் மலர் 2023-ல் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய விளம்பர கட்டணம் ரூ.12,600/- ஐ வழங்க கோரி KAL PUBLICATION (P) LTD திருநெல்வேலி பட்டியல் எண்.3300438558 நாள்.14.08.2023-ன் படியானது இந்நகராட்சிக்கு 28.08.2023 –ந் தேதி வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் விளம்பர கட்டணம் ரூ.12,600/- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

KAL PUBLICATION (P) LTD திருநெல்வேலி நிறுவனத்திற்கு விளம்பரக் கட்டணம் ரூ.12,600/- மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1142/2019/இ1)**

**<u>தீர்மானம் எண்.506</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:7**

இந்நகராட்சிக்குட்பட்ட கடையக்குடி உரக்கிடங்கின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு உரக்கிடங்கினை கண்காணிப்பு செய்திடும் பொருட்டு கண்காணிப்பு கேமரா பொருத்துவதற்கு இந்நகர்மன்றம் தீர்மான எண். 445 நாள். 27.07.2023 –ன்படி, அனுமதித்துள்ளது. அதனை தொடர்ந்து நகராட்சி கடையக்குடி உரக்கிடங்கில் அமைந்துள்ள (1) MCC, (2) Bio Gas Plant, (3) RRC போன்ற கட்டமைப்புகளை பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு செய்யவதற்கு 16 எண்ணம் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணி செய்து கொடுப்பதற்கு 24.08.2023 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| S. No. | Description | Qty | Amount | | |
|---|---|---|---|---|---|
| | | | Raj Systems, Sivakasi | Salini Systems, Sivakasi | Star Systems, Sivakasi |
| 1. | 16-CH Hikvision NVR | 1 | 16,500/- | 16,900/- | 17,300/- |
| 2. | 6-TB AV Hard disk (35 Days) | 2 | 27,400/- | 27,800/- | 28,000/- |
| 3. | 4-MB IP Network CCTV Camera | 16 | 1,50,400/- | 1,53,600/- | 1,84,300/- |
| 4. | 22” LED Monitor | 1 | 12,300/- | 12,500/- | 12,500/- |
| 5. | Modem ( With Out Sim) | 1 | 6,000/- | 6,200/- | 6,200/- |
| 6. | POE Switch 8-Port | 3 | 21,000/- | 21,300/- | 21,000/- |
| 7. | Cat -6 Network Cable Indoor | 610Mtr | 19,520/- | 21,350/- | 20,740/- |
| 8. | Cat -6 Network Cable Outdoor | 915 Mtr | 36,600/- | 39,345/- | 38,430/- |
| 9. | Camera PVC Box | 16 | 1,280/- | 1,424.- | 1,440/- |
| 10. | 4U Rack with Loader | 1 | 3,600/- | 3,600/- | 3,600/- |
| 11. | Cable Laying Charges with Material | 1525 Mtr | 1,00,650/- | 1,03,700/- | 1,02,175/- |
| 12. | Camera Installation Charges | 16 | 11,200/- | 12,000/- | 12,000/- |
| | **Amount** | | **4,06,450/-** | **4,19,719/-** | **4,47,685/-** |
| | **GST 18%** | | **73,161/-** | **75,549/-** | **80,583/-** |
| | **Total Amount** | | **4,79,611/-** | **4,95,268/-** | **5,28,268/-** |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் M/s. ராஜ் சிஸ்டம், சிவகாசி என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டதன்படி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

- குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் ரூ.4,79,611/-ஐ மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
- நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண்.1377/2023/எச்1)**

**<u>தீர்மானம் எண்.507</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:8**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டம் (CMBFS Phase III)-ன் படி, காயல்பட்டினம் நகராட்சி (1) கேடிஎம் தெரு (2) தீவுத் தெரு (3) மங்களவாடி, (4) தைக்கா தெரு (5) ஓடக்கரை (6) கடையக்குடி நகராட்சி பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியற்கு அனைத்து பள்ளி வேலைநாட்களிலும் 25.08.2023 முதல் காலை உணவு வழங்கும் திட்டம் செயல்படுத்தபட உள்ளதால். இந்தத் திட்டத்தில் திருச்செந்தூர் நகராட்சி ஒருங்கிணைந்த சமையல் கூடத்தில் உணவு தயாரித்து, இந்நகராட்சி பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு வழங்கப்பட உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டம் 25.08.2023 அன்று காலை 7.30 மணி அளவில் துவக்கி வைக்க இருப்பதால் முன்னேற்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு இந்நகராட்சிக்குட்பட்ட ஆறு (6) பள்ளிகளிலும் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்திற்குரிய விளம்பர பலகை (Banner) தயார் செய்த வகைக்கும், இந்நகராட்சி தீவுத் தெரு தொடக்கப்பள்ளியில் 25.08.2023 அன்று காலை 7.30 மணி அளவில் நடைபெற்ற துவக்க விழாவிற்கான அனைத்து முன்னேற்பாடுகளும் செய்த வகைக்கு ரூ. 39.250/- மட்டும் இந்நகராட்சி பொது பணி மேற்பார்வையாளரால் கீழ்கண்டவாறு செலவீனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வ. எண். | விபரம் | தொகை |
|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட ஆறு (6) பள்ளிகளிலும் மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவு திட்டம் என்ற பெயர் பலகை அமைத்து கொடுத்த வகைக்கு நாதன் ஆர்ட்ஸ், சண்முகபுரம் பட்டியல் | ரூ. 29,000/- |
| 2. | மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவு திட்டம் 25.08.2023 அன்று காலை 7.30 மணி அளவில் நடைபெற்ற துவக்க விழாவிற்கு பந்தல், சேர் வாடகை கல்ஃப் சமையல் சாமான்கள், காயல்பட்டினம் பட்டியல் எண். 1610 நாள். 25.08.2023 | ரூ. 6,750/- |
| 3. | மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவு திட்டம் 25.08.2023 அன்று காலை 7.30 மணி அளவில் நடைபெற்ற துவக்க விழாவிற்கு ஒலிபெருக்கி அமைத்து கொடுத்த வகைக்கு V.S.M. சவுண்ட்ஸ் , காயல்பட்டினம் பட்டியல் எண். 15 நாள். 25.08.2023 | ரூ.3,500/- |
| | மொத்தம் | ரூ.39,250/- |

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டம் செயல்படுத்தும் பொருட்டு முன்னேற்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வகைக்கு செலவீனங்கள் ரூ.39,250/- (முற்பத்து ஒன்பதாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்) பொதுபணி மேற்பார்வையாளருக்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுக்கிறது.

**அலுவலக குறிப்பு**

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.508**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:9**

காயல்பட்டினம் நகராட்சியில் 20.09.2023 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களால் நடத்தப்பட்ட காணொளி ஆய்வு கூட்டத்தில் தெரிவித்துள்ள அறிவுரையின்டிபடி, வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை, டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மற்றும் சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ள எழுது பொருட்கள், பதிவேடுகள் மற்றும் ஸ்டேஷ்னரி பொருட்கள் ஆகியவை அரசால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு சொசைட்டி மூலம் வாங்குவதற்கு உத்தேச செலவு தொகை ரூ.1.50 இலட்சம் ஆகும். மேற்காணும் செலவினங்கள் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.997/2015/அ1)**

**<u>தீர்மானம் எண்.509</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:10**

காயல்பட்டணம் நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனங்கள், TN 92 B 8679, TN69AR6018, TN69S0146 மற்றும் TN92A 6369 ஆகிய வாகனங்களுக்கான சில்லறை செலவினத் தொகை ரூ.3850/- னை பழுது பார்க்கப்பட்ட நிறுவனத்தின் உரிமையாளர் திரு.எஸ்.சுமன் என்பவரின் பெயருக்கு வழங்கிடுமாறு இவ்வலுலவக வாகன ஓட்டுநர் திரு.வெ.ராதாகிருஷ்ணன் அறிக்கை செய்ததை இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரும் பரிந்துரை செய்துள்ளார். எனவே மேற்படி செலவினத்தொகை ரூ.3850/-னை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-** பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 21/2023/எச்.1)**

**<u>தீர்மானம் எண்.510</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:11**

காயல்பட்டணம் நகராட்சியில் தற்காலிக அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு.கே.செந்தில்குமார் என்பவர் பணி நிரந்தரம் வேண்டி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD) No.58/2016 மற்றும் W.M.P(MD) No. 65 &66 /2016ன்படி தொடரப்பட்ட வழக்கின் 12.04.2022ம் தேதிய நாளிட்ட தீர்ப்பாணைக்கு எதிராக மேல்மறையீடு மற்றும் இடைக்கால தடையாணை கேட்டு பதிவு செய்யப்பட்ட வழக்கு எண்.W.A.(MD)No.540/2023, நாள் 06.06.2023 ம் தேதிய உத்தரவினை (30.06.2023)-ம் தேதி அலுவலகத்தில் பெறப்பட்டது) 30.06.2023ம் தேதிய சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு.சாதிக் ராஜா அவர்களின் சட்ட கருத்துருவின்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் அறிவுரையின்படியும், உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்திடும் வகையில், இந்திய உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் திரு.M.P.பார்த்திபன் என்பவர் மூலம் வாதுரை தயார் செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை எடுத்த வகைக்கு, வாதுரை தயார் செய்தல், வழக்கு பதிவு செய்தல் மற்றும் இதர வகைகளுக்கான கட்டணமாக தொகை ரூ.3.00 இலட்சம், மற்றும் மேற்படி வழக்கிற்காக உச்ச நீதிமன்றத்தில் வாதுரைக்கு (conference and engagement for case) ஓய்வு பெற்ற

உயர்நீதிமன்ற நீதியரசர் திரு.நாகமுத்து அவர்களை ஆஜராக வைத்த வகைக்கு கட்டணமாக தொகை ரூ.3.00 இலட்சம் ஆகியவற்றினை முறையே இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் 20.07.2023 மற்றும் 14.08.2023 ம் தேதிகளின் முன் அனுமதி பெற்று, இவ்வழக்கின் முக்கியத்துவம் கருதி வழங்கியதை மன்றம் அங்கீகரித்திட வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-** வழக்கின் முக்கியத்துவம் கருதி வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண். 110/2012/அ1)**

**<u>தீர்மானம் எண்.511</u>**

- வழக்கு கட்டணம் ரூ.3,00,000/- வழங்கியது அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:12**

காயல்பட்டணம் நகராட்சியில் தற்காலிக அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு.கே.செந்தில்கமார் என்பவர் பணி நிரந்தரம் வேண்டி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD) No.58/2016 மற்றும் W.M.P(MD) No. 65 &66 /2016ன்படி தொடரப்பட்ட வழக்கின் 12.04.2022ம் தேதிய நாளிட்ட தீர்ப்பாணைக்கு எதிராக மேல்மறையீடு மற்றும் இடைக்கால தடையாணை கேட்டு பதிவு செய்யப்பட்ட வழக்கு எண்.W.A.(MD)No.540/2023 நாள் 06.06.2023 ம் தேதிய உத்தரவினை (30.06.2023ம் தேதி அலுவலகத்தில் பெறப்பட்டது) 30.06.2023ம் தேதிய சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு.சாதிக் ராஜா அவர்களின் சட்ட கருத்துருவின்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் அறிவுரையின்படியும், உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்திடும் வகையில், இந்திய உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் திரு.M.P.பார்த்திபன் என்பவர் மூலம் வாதுரை தயார் செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை எடுத்த வகைக்கு, வாதுரை தயார் செய்யப்பட்டதில் அறிவுரை மற்றும் கருத்துக்கள் வழங்கிய வகைக்கு(conference and engagement for case) கட்டணமாக திரு.அமித் ஆனந்த் திவாரி, கூடுதல் அட்வகேட் ஜெனரல், உச்சநீதிமன்றம் என்பவருக்கு தொகை ரூ.1.10 இலட்சம், வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு -** வழக்கின் முக்கியத்துவம் கருதி அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 110/2012/அ1)**

**<u>தீர்மானம் எண்.512</u>**

- வழக்கு கட்டணம் ரூ.1,10,000/- வழங்கியது அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:13**

அரசாணை எண்.15 சிறப்பு திட்டம் செயலாக்கதுறை நாள்10.07.2023, மாவட்ட ஆட்சித்தலைவர், தூத்துக்குடி அவர்களின் கடிதம் ந.க.எண். 1108040/2023/ஜே1, நாள் 15.07.2023 மற்றும் வட்டாட்சியர், திருச்செந்தூர் அவர்களின் கடிதம் எண்.ந.எ.ஆ4/1956/2023 நாள் 20.07.2023 ன்படியும் காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில், மகளிர்களுக்கு ரூ.1000/- வழங்குவதற்காக, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் 2 தவணைகளில் (2 முகாம்கள்) பெறுவதற்கு தெரிவிக்கப்பட்டு, காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் முகாம்கள் நடைபெற்றது. மேற்படி நடைபெற்ற முகாம்களுக்கு அடிப்படை வசதிகள் செய்தல் மற்றும் முகாம்களில் பணியாற்றிய பணியாளர்களுக்கான இருக்கை, குடிநீர் மற்றும் உணவு வசதிகள் ஆகியன (மாவட்ட ஆட்சியர் கடிதத்தின்படி நகராட்சி நிதியில் இருந்து செய்து தர தெரிவிக்கப்பட்டவாறு) ஏற்படுத்திக் கொடுத்த வகைக்கு செலவு தொகை ரூ.2,61,420/-ஐ இந்நகராட்சி பொது

பணி மேற்பார்வையாளராகிய திருமதி.ஜான்சிராணி என்பவரால் செலவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தெகையினை நகரமன்றத் தலைவர் அவர்களின் 13.09.2023ம் தேதிய முன் அனுமதி பெற்று வழங்கியதை மன்றம் அங்கீகரிக்க வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு -** அவசர அவசியம் கருதி மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.513</u>**

- ரூ.2,61,420/- வழங்கியது அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:14**

அரசாணை எண்.15 சிறப்பு திட்டம் செயலாக்கதுறை நாள்10.07.2023ன்படி, கலைஞரின் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தும் விதமாகவும், இது குறித்து பொது மக்களுக்கு தெரிவிக்கும் விதமாகவும் காயல்பட்டணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பேருந்து நிலைய பகுதி, நகராட்சி அலுவலக வளாக பகுதி மற்றும் பொது மக்கள் கூடும் சந்தை பகுதி ஆகியவற்றில் நிரந்தரமாக 10X12 அளவிலான விளம்பர பலகைகளை உடனடியாக நிறுவிட, 13.09.2023ம் தேதிய மாவட்ட ஆட்சித்தலைவர், தூத்துக்குடி அவர்களின் அலுவலக தொலைபேசி செய்தி வாயிலாக தெரிவிக்கப்பட்டது. அதன்பிரகாரம் மேற்படி இடங்களில், மகளிர் உரிமை தொகை தொடர்பான விளம்பர பலகைகள் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிப்பெற்று வைக்கப்பட்டதனை மன்றம் அங்கீகரித்திடவும் அதற்கான செலவின தொகை ரூ.57600/-ஐ இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திட மன்ற அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** - அவசர அவசியம் கருதி விளம்பர பலகைகள் வைக்கப்பட்டதை அங்கீகரிக்கலாம் மேலும் அதற்கான தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1344/2023/எப்.1)**

**<u>தீர்மானம் எண்.514</u>**

- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:15**

எதிர்வரும் வடகிழக்கு பருவ மழைக்காலத்தினை முன்னிட்டு, காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர பரவுகின்ற நோய்களை தடுத்திடவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்திடவும் பொது சுகாதார பிரிவின் மூலம் மேல்நடவடிக்கை எடுத்திட, தேவையான அளவு கிருமிநாசினிகள், கொசு ஒழிப்பு மருந்துகளை மற்றும் தளவாடச்சாமான்கள் இருப்பு வைத்து கொள்ள, 19.09.2023ம் தேதிய தலைமைச்செயலாளர், சென்னை அவர்களின் காணொளி மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி ஆகியோரின் ஆய்வு கூட்ட அறிவுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இதன் அடிப்படையில் காயல்பட்டணம் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான, கொசு ஒழிப்பு மருந்துகள், கிருமிநாசினிகள் நிலவேம்பு கசாய பொடி பாக்கெட் மற்றும் தளவாடச்சாமான்கள் ஆகியவற்றினை அரசு கூட்டுறவு நிறுவனத்திடம் இருந்து பெற்று வாங்கிடவும் இதற்கான செலவினங்களை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-** அவசர அவசியம் கருதி இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.515</u>**

- அரசு கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து பொருட்கள் வாங்க அனுமதிக்கப்படுகிறது.
- வருவாய் நிதியில் செலவினங்கள் மேற்கொள்ள அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:16**

காயல்பட்டினம் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட புதிய பேருந்து நிலையம் வளாகத்தில் அமைந்துள்ள கிணற்றில் தண்ணீர் எடுக்கும் உரிமம் 2018-2019-ம் ஆண்டு 27.04.2018 நடைபெற்ற பொது ஏலத்தின் (அரசாங்க மதிப்பு) ரூ.3,60,333/- என நிர்ணயம் செய்யப்பட்டது. அதில் திரு கே காசிமுனியசாமி என்பவரால் ஏலத்தொகை ரூ 5,60,000/- கோரப்பட்டு மூன்று வருடங்கள் நடத்தி வந்தார் பின்னர் 2021-2022 ஆம் ஆண்டிற்கான பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 21.12.2021 அன்று நடைபெற்றது. அதில் ஏலம் கேள்வி தொகை (அரசாங்க மதிப்பு) ரூ.6,44,000/- என நிர்ணயம் செய்யப்பட்டு, அதில் திரு வீ.செந்தில் குமார் அவர்களால் ஏலத்தொகை ரூ.14,40,500/- கோரப்பட்டது. ஆனால் ஏலத் தொகை செலுத்தப்படவில்லை. ஆகையால், மீண்டும் மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி 22.11.2022 அன்று அறிவிக்கப்பட்டு கேள்வி தொகை (அரசாங்க மதிப்பு) ரூ.14,40,500/- என நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால் ஏலம் எடுக்க யாரும் முன் வராத காரணத்தால் அரசாங்க மதிப்பு குறைத்து ரூ 9,00,000/- என்று நிர்ணயம் செய்தும், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் திரு. கே. செந்தில் ராஜேஷ் என்பவர் மட்டும் கலந்து கொண்டு ரூ.6,85,000/-க்கு (ரூபாய் ஆறு இலட்சத்து எண்பத்து ஐந்தாயிரம் மட்டும்) ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். அதனை தொடர்ந்து 08.03.2023 அன்று நடத்தப்பட்ட மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளின் ஏலம் கேள்வி தொகை (அரசாங்க மதிப்பு) ரூ 8,00,000/- என நிர்ணயம் செய்தது ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் யாரும் ஏலம் எடுக்க முன் வராத காரணத்தால் ஏலத் தொகை மேலும் குறைத்து ரூ.7,00,000/- நிர்ணயம் செய்தும் யாரும் ஏலம் கோர முன்வரவில்லை. ஆகவே, இந்நகர்மன்ற தீர்மான எண்.322 நாள்.21.03.2023-ன்படி, தற்போது துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. நிர்வாக நலனை கருத்தில் கொண்டு ஓராண்டிற்கான சராசரி வருமானத்தின் அடிப்படையில், நகராட்சி புதிய பேருந்து நிலைய கிணற்றில் தண்ணீர் எடுக்கும் உரிமைத்திற்கான ஏல கேள்வி (அரசாங்க மதிப்பு) குறைத்து நிர்ணயம் செய்து தொடர்ந்து ஏல நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-**

நிர்வாக நலனை கருத்தில் கொண்டு நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் தண்ணீர் எடுக்கும் உரிமம் தற்போது நகராட்சி மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதற்குரிய ஆண்டு சராசரி வருமானத்தின் அடிப்படையில் ஏலகேள்வித்தொகையினை (அரசாங்க மதிப்பு) குறைத்து நிர்ணயம் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.516</u>**

- நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் தண்ணீர் எடுக்கும் உரிமத்திற்கான அரசாங்க மதிப்பு ரூ.6,00,000/- ஆக நிர்ணயம் செய்து தீர்மானக்கப்படுகிறது.
- மறு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.
- மறு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரி முடிவு செய்யும் வரை துறை மூலம் வசூல் செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 17**

காயல்பட்டினம் நகராட்சி நகர்மன்ற தலைவருக்கென மஹிந்திரா ஸ்கார்பியோ (Mahindra Scarpio) வாகனம் ஒன்று வாங்குவதற்கும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், இந்நகர்மன்ற தீர்மான எண்.154 நாள்.29.09.2022-ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மஹிந்திரா ஸ்கார்பியோ வாகனம் ஜெம் விலையில் (GEM Rate) கொள்முதல் செய்து கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.30742/2022/MA1

நாள்.11.11.2022 -ன்படி, அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மஹிந்திரா ஸ்கார்பியோ - Mahindra Scorpio வாகனம் ஜெம் விலை விகிதம் விநியோக கட்டணம், வரிகள் உட்பட வாகனத்தின் கொள்முதல் மொத்தம் ரூ.18,33,489/-க்கு மஹிந்திரா & மஹிந்திரா நிறுவனம் மூலம் Mahindra Scorpio Z8 L D MT 2WD 7 STR BSVI -2.0 AZ1036 YDT6A4EA01 WQ-SCORPIO –N D MT Z8L 7S WQ- வாகனம் வரப்பட்டுள்ளது.

இந்நகராட்சிக்கு வரப்பட்ட மஹிந்திரா ஸ்கார்பியோ மோட்டார் வாகனத்தினை முழு காப்பீட்டு செய்வதற்கும், (Vehicle Insurance) திருச்செந்தூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகனப் பதிவுகள் செய்வதற்கும், (New Vehicle Registration Fee & Other Tax) வரிகள் மற்றும் கட்டணங்கள் செலுத்த வேண்டியுள்ளது. மேலும், இந்த வாகனத்திற்கு உதிரி பாகங்கள் பொருத்தும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கான உத்தேச செலவினம் ரூ.4.50 இலட்சத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. நகர்மன்ற தலைவருக்கு புதிய ஸ்கார்பியோ வாகனம் வாங்கப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
2. நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேற்காணும் பணிகளுக்கான செலவினம் ரூ.4.50 இலட்சத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண். 793/2022/இ1)**

**<u>தீர்மானம் எண்.517</u>**

- அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.
- வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 18**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்கு சுகாதாரமான முறையில் குடிநீர் விநியோகம் செய்வது மிகவும் அவசியம் என்பதால் குளோரின் வாயுவை குடிநீருடன் கலந்து விநியோகம் செய்வதற்குரிய இயந்திர அறை இந்நகராட்சிக்குட்பட்ட உச்சிமகாளியம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ளது. இந்த குளோரின் இயந்திரம் பழுது ஏற்பட்டுள்ளதால், குடிநீரில் சீரான குளோரின் வாயு கலக்க இயலாத நிலை ஏற்பட்டு வருகிறது. இந்நகர் பொதுமக்கள் நலன் மற்றும் நோய் தொற்று தடுப்பு கருதியும், மதிப்பிற்குரிய தலைமை செயலாளர் அவர்கள் குடிநீர் மற்றும் தரம் குறித்து அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க, மேற்படி குளோரின் இயந்திரத்தை உடனடியாக பழுதுகள் சரி செய்து தானியங்கி முறையில் இயக்கும் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, ரூ.9.95 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் பணிகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்காணும் பணிகள் செய்தவற்குரிய செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதி அல்லது எதிர்வரும் திட்ட நிதியில் இப்பணியினை மேற்கொள்வதற்கு நகர்மன்ற அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. குடிநீர் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு ரூ.9.95 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணிக்கு திட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டால் அவற்றை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் ஈடுசெய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.518**

- அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்: 19**

காயல்பட்டினம் நகராட்சி குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு 2017-ஆம் ஆண்டு முதல் புதிய குடிநீர் மேம்பாடு திட்டம் செயல்படுத்தும் வகையில் ஶ்ரீவைகுண்டம் பொன்னன்குறிச்சியில் தலைமை நீரேற்று மையம் அமைக்கப்பட்டு தாமிரபரணி ஆற்றுப்படுகையில் 6 எண்ணம் உள்வடிகட்டி கிணறுகள் அமைத்து ஒவ்வொரு கிணற்றிலும் 7.5 HP திறனுள்ள மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு அதிலிருந்து தலைமை நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர் தேக்க தொட்டியில் குடிநீர் சேமிக்கப்பட்டு, 100HP திறனுள்ள மின் மோட்டார்களை பயன்படுத்தி தலைமை நீரேற்று நிலையம் பொன்னன் குறிச்சியில் இருந்து காயல்பட்டினம் நகர் பகுதிக்கு சுமார் 27 கிலோ மீட்டர் நீளத்திற்கு 350 MM அளவுள்ள குடிநீர் குழாய் மூலம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 19 மேல்நிலை நீர்த் தேக்க தொட்டிகளுக்கும், (மொத்த கொள்ளளவு 23.00 இலட்சம்) குடிநீர் ஏற்றப்பட்டு இந்நகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி பொன்னன்குறிச்சியின் தலைமை நீரேற்று நிலையத்தில் மின் தடைகள் ஏற்படும் போது இந்நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதியில் தடையில்லாமல் சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு பொன்னன்குறிச்சி தலைமை நீரேற்றும் நிலையத்திற்கு 200KVA திறனுள்ள மின் ஜெனரேட்டர் வாங்குவதற்கு, ரூ.25.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் பணிகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு உடனடியாக இப்பணி மேற்கொள்வதற்கு நகர்மன்ற அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு 200KVA திறனுள்ள மின் ஜெனரேட்டரை அரசு திட்ட மானியம் அல்லது இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து வாங்கி பொருத்துவதற்கு மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.519**

- அரசு திட்டத்தில் மானியம் பெற்று பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 20**

காயல்பட்டினம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் பொன்னன் குறிச்சியில் இருந்து காயல்பட்டினம் நகர் பகுதிக்கு சுமார் 27 கிலோ மீட்டர் நீளத்திற்கு 350 MM அளவுள்ள குடிநீர் குழாய் மூலம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த் தேக்க தொட்டிகளுக்கும், குடிநீர் ஏற்றப்பட்டு இந்நகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் இந்நகராட்சிக்குட்பட்ட மாட்டுக்குளம் பகுதியில் அமைந்துள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி வளாகத்தில்

அமைக்கப்பட்டுள்ள சுற்று சுவர் உயரம் இல்லாமல் இருப்பதால் அப்பகுதியை சார்ந்தவர்கள் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி வளாகத்தில் அத்துமீறி சென்று குடிநீரை அசுத்தம் செய்து வருகிறார்கள். ஆகவே, குடிநீர் பாதுக்காப்பை கருதியும், சுத்தமான மற்றும் சுகாதாரமான முறையில் குடிநீர் வழங்கும் பொருட்டு மாட்டுக்குளம் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி வளாகத்தின் சுற்று சுவரினை உயர்த்தி சுற்று சுவரில் கிரில் அமைக்கும் பணி செய்வதற்கு, ரூ.1.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் பணிகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு இப்பணிகள் செய்தவற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு நகர்மன்ற அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. ரூ.1.90 இலட்சம் மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1910/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.520</u>**

- மதிப்பீடு அங்கீகரிக்கப்படுகிறது.
- வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 21**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பல இடங்களில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படாமலும், புதிதாக வீடு கட்டி நீட்டிப்பு செய்துள்ள குடியிருப்பு பகுதிகளிலும், குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படாமலும், இருப்பதால் அப்பகுதிகளில் குடிநீர் வழங்க இயலாத நிலையில் உள்ளது. அப்பகுதி மக்களின் குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டு சீரான முறையில் சுத்தமான சுகாதாரமான குடிநீர் வழங்கும் பொருட்டு, புதியதாக குடிநீர் பகிர்மானக் குழாய்கள் பதிக்கும் பணிகள் செய்வதற்கு கீழ்க்காணும் விவரப்படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.) இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | திருவள்ளுவர் தெருவில் குடிநீர் பகிர்மானக்குழாய் அமைக்கும் பணி | 1.60 |
| 2. | தைக்காபுரத்தில குடிநீர் பகிர்மானக்குழாய் அமைக்கும் பணி | 0.75 |
| 3. | பிலால்பள்ளி தெருவில் குடிநீர் பகிர்மானக்குழாய் அமைக்கும் பணி | 1.60 |
| 4. | காயிதேமில்லத் நகர் தெற்கு முதல் தெரு நீட்டிப்பு தெருவில் குடிநீர் பகிர்மானக்குழாய் அமைக்கும் பணி | 0.50 |
| 5. | பெரிய நெசவுத்தெருவில் குடிநீர் பகிர்மானக்குழாய் அமைக்கும் பணி | 0.75 |
| 6. | குளம் சாகிப்தம்பி தோட்டம் பகுதியில் குடிநீர் பகிர்மானக்குழாய் அமைக்கும் பணி | 1.40 |
| 7. | பிரின்ஸ் தெருவில் குடிநீர் பகிர்மானக்குழாய் அமைக்கும் பணி | 1.50 |

குடிநீர் பணிகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு இந்நகர் பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், மேற்காணும் மதிப்பீட்டிலான ஏழு (7) பணிகள் செய்தவற்குரிய செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளுவதற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்காணும் மதிப்பீடுகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1912/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.521</u>**

- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 22**

காயல்பட்டினம் நகராட்சி ஸ்ரீவைகுண்டம் பொன்னன்குறிச்சியில் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து சுமார் 27 கிலோ மீட்டர் நீளத்திற்கு 350 MM அளவுள்ள குடிநீர் குழாய் அமைக்கப்பட்டு இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 19 மேல்நிலை நீர்த் தேக்க தொட்டிகளுக்கும், (மொத்த கொள்ளளவு 23.00 இலட்சம்) குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நகர் பகுதிக்கு விநியோகம் செய்யபடும் குடிநீர் சில நாட்களில் பற்றாக்குறையாக வருவதால் பொதுமக்களுக்கு போதிய அளவு குடிநீர் வழங்குவதற்கு சிரமம் ஏற்படுகிறது.

ஆகையால், இந்நகர் பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து இந்நகர் பகுதிக்கு வரும் குடிநீரினை கணக்கீடு செய்யும் வகையில் குளோரின் இயந்திரம் அமைந்துள்ள இடத்தின் அருகில் குடிநீர் குழாய்களில் புதிதாக 350MM அளவு மானி (Magnetic Flow Meter) பொருத்தும் பணிக்கு ரூ.9.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் பணிகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு உடனடியாக இப்பணிகள் மேற்கொள்வதற்கு நகர்மன்ற அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. ரூ. 9.00 இலட்சம் மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு குடிநீர் குழாய்களில் புதிதாக 350MM அளவு மானி (Magnetic Flow Meter) பொருத்தும் பணி அரசு திட்ட மானியம் அல்லது இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து வாங்கி பொருத்துவதற்கு மன்றம் முடிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.522</u>**

- அரசு திட்டத்தில் மானியம் பெற்று பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:23**

காயல்பட்டினம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் பொன்னன் குறிச்சியில் இருந்து காயல்பட்டினம் நகர் பகுதிக்கு சுமார் 27 கிலோ மீட்டர் நீளத்திற்கு 350 MM அளவுள்ள குடிநீர் குழாய் மூலம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த் தேக்க தொட்டிகளுக்கும், குடிநீர் ஏற்றப்பட்டு இந்நகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் இந்நகராட்சிக்குட்பட்ட தீவுத்தெரு குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சுற்று சுவர் உடைந்த நிலையில் பாதுகாப்பு இல்லாமல் இருப்பதால் குடிநீர் பாதுகாப்பை கருதியும், சுத்தமான மற்றும் சுகாதாரமான முறையில் குடிநீர் வழங்கும் பொருட்டும், தீவுத் தெரு மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியை பாதுகாப்பு செய்யும் வகையில் சுற்று சுவர் மற்றும் பேவர் பிளாக் அமைக்கும் பணி செய்வதற்கு, ரூ.19.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் பணிகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு இப்பணிகள்

செய்வதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு நகர்மன்ற அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1910/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.523</u>**

- மதிப்பீடு அங்கீகரிக்கப்படுகிறது.
- வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:24**

காயல்பட்டினம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் பொன்னன் குறிச்சியில் இருந்து காயல்பட்டினம் நகர் பகுதிக்கு சுமார் 27 கிலோ மீட்டர் நீளத்திற்கு 350 MM அளவுள்ள குடிநீர் குழாய் மூலம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த் தேக்க தொட்டிகளுக்கும், குடிநீர் ஏற்றப்பட்டு இந்நகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் இந்நகராட்சிக்குட்பட்ட ஜலாலியாவில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிக்கு தனியாக சுற்று சுவர் இல்லாமல் இருப்பதால், குடிநீர் பாதுகாப்பை கருதியும், சுத்தமான மற்றும் சுகாதாரமான முறையில் குடிநீர் வழங்கும் பொருட்டும், ஜலாலியா மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிக்கு சுற்று சுவர் மற்றும் பேவர் பிளாக் அமைக்கும் பணி செய்வதற்கு, ரூ.16.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் பணிகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு இப்பணிகள் செய்தவற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு நகர்மன்ற அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1910/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.524</u>**

- மதிப்பீடு அங்கீகரிக்கப்படுகிறது.
- வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:25**

காயல்பட்டினம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் பொன்னன்குறிச்சியில் இருந்து காயல்பட்டினம் நகர் பகுதிக்கு சுமார் 27 கிலோ மீட்டர் நீளத்திற்கு 350 MM அளவுள்ள குடிநீர் குழாய் மூலம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த் தேக்க தொட்டிகளுக்கும், குடிநீர் ஏற்றப்பட்டு இந்நகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் இந்நகராட்சிக்குட்பட்ட குத்துக்கல் தெருவில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிக்கு தனியாக சுற்று சுவர் இல்லாமல் இருப்பதால், குடிநீர் பாதுகாப்பை கருதியும், சுத்தமான மற்றும் சுகாதாரமான முறையில் குடிநீர் வழங்கும் பொருட்டும், குத்துக்கல் தெரு மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிக்கு சுற்று சுவர் மற்றும் பேவர் பிளாக் அமைக்கும் பணி செய்வதற்கு ரூ.9.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் பணிகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு இப்பணிகள் செய்தவற்குரிய செலவினத்தை

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு நகர்மன்ற அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1910/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.525</u>**

- மதிப்பீடு அங்கீகரிக்கப்படுகிறது.
- வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்: 26**

காயல்பட்டினம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022, பிரிவு 57(7)-ன் கீழ், மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்குரிய செலவினங்கள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.526</u>**

- பிரிவு 57(7) பதிவேடு பார்வையிட்டு செலவினங்கள் அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:27**

காயல்பட்டினம் நகராட்சியின் **ஏப்ரல்-2023 முதல் ஆகஸ்ட் - 2023** ஆம் மாதம் வரையிலான கேட்பு வசூல் நிலுவை பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **இனங்கள்** | **நிலுவை & நடப்பு கேட்பு ரூ. (இலட்சத்தில்)** | **நிலுவை &நடப்பு வசூல் ரூ. (இலட்சத்தில்)** | **நிலுவை &நடப்பு நிலுவை ரூ. (இலட்சத்தில்)** |
|---|---|---|---|---|
| 1 | சொத்துவரி | 190.25 | 100.53 | 89.72 |
| 2 | காலிமனை வரி | 19.36 | 11.67 | 7.69 |
| 3 | குடிநீர் கட்டணம் | 88.48 | 33.25 | 55.23 |
| 4 | வரியற்ற இனம் | 0.43 | 0 | 0.43 |
| 5 | தொழில்வரி | 17.63 | 1.90 | 15.73 |
| 6 | SUC Charges | 18.28 | 7.82 | 12.56 |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**<u>தீர்மானம் எண்.527</u>**

- பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**பொருள் எண்:28**

காயல்பட்டினம் நகராட்சியின் **ஏப்ரல்-2023 முதல் ஆகஸ்டு - 2023** மாதம் வரையிலான வரவு மற்றும் செலவு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வரவினங்கள் (இலட்சத்தில்)** | | | |
|---|---|---|---|
| 110 | வரியினங்கள் | **I-1** | 114.10 |
| 140 | பயனர் கட்டணங்கள் | **I-4** | 41.07 |
| 150 | விற்பனை மற்றும் வாடகைக் கட்டணம் | **I-5** | 3.65 |
| 160 | மானியங்கள் | 1-6 | 301.22 |
| 170 | முதலீடுகள் மூலம் வருமானம் | **I-7** | 0.02 |
| 180 | இதர வருமானம் | **I-9** | 8.59 |
| **மொத்தம்** | | | **468.65** |
| **செலவினங்கள் (இலட்சத்தில்)** | | | |
| 210 | ஊதிய செலவினங்கள் | **I-10** | 170.20 |
| 220 | நிர்வாக செலவினங்கள் | **I-11** | 27.69 |
| 230 | இயக்க-பழுதுகள்(ம)பராமரிப்பு செலவுகள் | **I-12** | 272.01 |
| **260** | நகராட்சி பங்குத்தொகை | **1-15** | **11.34** |
| **மொத்தம்** | | | **481.24** |
| **மொத்தம் கூடுதல் / குறைவு** | | | **12.59** |

**அலுவலக குறிப்பு:**

- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**<u>தீர்மானம் எண்.528</u>**

- பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**ஒம்/கே.ஏ.எஸ். முத்து முஹம்மது**
**நகர்மன்ற தலைவர்,**
**காயல்பட்டினம் நகராட்சி**